தினமணி

# பி.ட்டி பருத்தியின் 10 ஆண்டுகள்

ஆர். செல்வம்

First Published : 28 Aug 2012 12:43:57 AM IST

வாதப் பிரதிவாதங்கள், எதிர்ப்புகளுடன் பி.ட்டி பருத்தி அரசு அனுமதியுடன் இந்தியாவில் நுழைந்து 10 ஆண்டுகளாகிவிட்டது.

பி.ட்டியின் மீது விமர்சனங்கள் தொடர்ந்த நிலையிலும் வேகமாகப் பரவி 95% பரப்பு பருத்தி பி.ட்டி என்றானது. இந்தியாவில் பி.ட்டி பருத்தியைக் கடுமையாக விமர்சித்தவர்கள் உள்ளிட்ட அனைவரின் ஆடைகளும் பி.ட்டி பருத்தியால்தான் ஆனது என்பதே உண்மை.

"அடுத்த பத்தாண்டுகளில் எல்லா விதைகளும் எங்களுடையதாவே இருக்க வேண்டும்' என்று மான்சான்டோ அதிகாரியொருவர் கூறியது பருத்தி ஆடைகளில் நடந்துள்ளது.

உண்மையில் பி.ட்டி பருத்தி இந்தியப் பருத்திப் பொருளாதாரத்தைப் புரட்டிப் போட்டுள்ளது. 2 லட்சம் பருத்தி விவசாயிகள் தற்கொலைகளுக்கு மத்தியில் இந்தியா பருத்தி ஏற்றுமதி நாடாக மாறியுள்ளதென்பது நேரெதிர் உண்மைகள்.

"பி.ட்டி பருத்தியால்தான் இந்தியா பருத்தி விளைச்சலில் உச்சத்தை எட்டியுள்ளது. ஆகவே, இந்திய விவசாயத்தை ஒட்டுமொத்தமாக மரபணு மாற்று விவசாயமாக மாற்ற வேண்டும்' என்ற கருத்து வளர்க்கப்பட்டு 50-க்கும் மேலான உணவுப் பயிர்கள் உள்ளிட்ட 83 பயிர்களின் மரபணு மாற்றப்படுகிறது. ஆனால், பி.ட்டி பருத்தியின் 10 ஆண்டுகால தாக்கம் பற்றி எவரும் பேச மறுக்கிறார்கள்.

பிட்.டி பருத்தியின் பத்தாண்டுகள் பற்றி நடுநிலையாக ஆராய்ந்த வெகு சிலரின் முடிவுகள் மக்கள் அமைப்புகள் கூறிய, "பி.ட்டி மரபணுவால் விளைச்சல் உயரவில்லை, பூச்சிக்கொல்லிகள் பயன்பாடு குறையவில்லை, ரசாயன உரத் தேவை அதிகமாகியுள்ளது' போன்ற விமர்சனங்களை உண்மையென்கிறது.

ஆரம்பத்திலேயே ஆராய்ந்திருந்தால் பல்லாயிரம் தற்கொலைகள் தடுக்கப்பட்டிருக்கும். 10 ஆண்டுகளாக நம் விஞ்ஞானிகள் ஏன் ஆராயவில்லை என்பதற்குப் பதில் நமக்கே தெரியும்.

2000-ல் ஹெக்டேருக்கு 278 கிலோவாக இருந்த பஞ்சு உற்பத்தி இன்று 480 கிலோவில் நிற்கிறது. திணிக்கப்பட்ட பி.ட்டி மரபணுக்கள் காய்ப்புழுக்களைக் கொன்று அதனால் காய்களைக் காப்பாற்றி விளைச்சலை 20 சதவீதத்துக்கு அதிகரிக்கும் என்றனர்.

காய்ப் புழுக்கள் கட்டுப்பட்டுத்தப்பட்டதாகக் கொண்டாலும் விளைச்சல் 20 சதவீதம் உயர்வுதானே இருக்க முடியும். ஏறத்தாழ 100 சதவீதம் அதிகம் என்பது பொருந்தி வரவில்லையே? இது குறித்து ஆராய்ந்த மத்திய பருத்தி ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் முனைவர். கேசவ் கராந்தி உண்மைகளை அடுக்குகிறார்.

பி.ட்டி அனுமதிக்கு முந்தைய ஆண்டான 2000-01-ல் பருத்தி உற்பத்தி ஹெக்டேருக்கு 278 கிலோ. 02-03ல் பி.ட்டி பருத்தி அனுமதிக்கப்பட்ட முதல் ஆண்டில் பி.ட்டி பருத்தி பயிரிடப்பட்ட பரப்பு 1 சதவீதம். அப்போது பருத்தி உற்பத்தி ஹெக்டேருக்கு 302 கிலோ.

03-04ல் பி.ட்டி பருத்தியின் பரப்பளவு 1.1 சதவீதம். உற்பத்தி அளவு 399 கிலோ. அதாவது 33.7 சதவீதம் அதிகரிப்பு. 04-05ல் பி.ட்டியின் மொத்த பரப்பு 5.7 விழுக்காடாக உயரும்போது விளைச்சலின் அளவு 18 சதவீதம் அதிகரித்து 470 கிலோவானது.

இவ்விரு ஆண்டுகளில் விளைச்சல் அதிகரிப்பு 52 சதவீதம். இத்தகு அதிர்ச்சியூட்டும் விளைச்சல் அதிகரிப்பு இந்தியாவில் எக்காலத்திலும் எப்பயிரிலும் நடக்கவில்லை.

இக்காலகட்டத்தில் கோதுமை, நெல் போன்ற பயிர்களில் விளைச்சல் 4 சதவீதம் கூட உயராதபோது, பருத்தியில் மட்டும் விளைச்சல் 52 சதவீதம் உயர்வு எப்படி?

பி.ட்டியின் பரப்பு வெறும் 5.7 சதவீதம் ஆக இருக்கும்போதே 52 சதவீதம் அளவுக்கு உயர்ந்த விளைச்சல் பி.ட்டியின் பரப்பு 95 சதவீதத்துக்கு உயர்ந்தபோது இன்னும் அதிகரித்திருக்க வேண்டுமல்லவா?

பி.ட்டி பருத்தியின் பரப்பு 90 சதவீதத்துக்கு வந்தபோது விளைச்சல் அளவு 481 கிலோ மட்டுமே. எப்படியிருப்பினும் 278-லிருந்து 481-க்கு உயரக் காரணம் என்ன?

1951-52-ல் இந்திய விளைச்சலின் அளவு ஹெக்டருக்கு 92 கிலோ. அப்போதிருந்தது குட்டை இழைப் பாரம்பரிய பருத்தி ரகங்கள். நூற்பு இயந்திரங்களுக்கான நீண்ட இழை பருத்திக்காக வீரியவிதை என்ற பெயரில் ஹைபிரீடுகள் நுழைக்கப்பட்டதால் விளைச்சல் அதிகரிக்கத் தொடங்கியது.

ஹைபிரீடுகளில் ஹைபிரீடு விகர் என்ற தன்மையால் விளைச்சல் அதிகமாக இருக்கும். ஆனால், ஒவ்வொரு முறையும் விதை வாங்க வேண்டும், அதிக தண்ணீர், உரம், பூச்சிக்கொல்லிகள் வேண்டும். இல்லாவிடில், வீரியமில்லா வெற்று விதைகளே. ஹைபிரீடுகளுக்கு மாறுவது 1950-களின் ஆரம்பத்திலேயே தொடங்கினாலும் 2000-க்குப் பிறகே வேகமெடுத்தது.

2000-த்தில் 40 சதவீதத்தில் ஹைபிரீடுகளும் பிற பரப்பில் மேம்படுத்தப்பட்ட பாரம்பரிய ரகங்களும் விதைக்கப்பட்டன. பி.ட்டி பாரம்பரிய ரகங்களில் திணிக்கப்படாமல் ஹைபிரீடுகளில் திணிக்கப்பட்டு விற்பனைக்கு வந்தது 2002-ல். 2009-ல் 85.6 சதவீதம் பரப்பும் 2011-ல் 95 சதவீதம் பரப்பும் பி.ட்டி ஹைபிரீடுக்குள் வந்தது.

ஆகவே இந்திய பருத்தி விளைச்சல் உயர்வு ஹைபிரீடுகளுக்கு மாறியதற்கேற்ப உயர்ந்துள்ளது. அதிக பரப்பு ஹைபிரீடு பி.ட்டிக்குள் வந்ததால் விளைச்சல் உயர்ந்தது என்று கிராந்தி கூறுகிறார்.

2002-03-ல் 4-வது இடத்தில் இருந்து இன்று முதலிடத்திலுள்ள குஜராத்திலிருந்துதான் இன்றைய விளைச்சலில் பெரும்பகுதி கிடைக்கிறது. குஜராத் முதல்வர் நரேந்திர மோடி ஒரு லட்சம் சிறுசிறு தடுப்பணைகள் மூலம் பாசனத்தைப் பல லட்சம் ஏக்கர்களுக்கு உறுதிப்படுத்த, அதுவரை மானாவாரியாகக் கடலை, பயறு போன்றவை விளைந்த நிலத்தை விவசாயிகள் பருத்திக்கு மாற்றினர்.

ரசாயனங்களால் பாதிப்புறாத வளமான நிலம், பாசன வசதி, விதை நேர்த்தி செய்யப்பட்ட ஹைபிரீடுகள் போன்ற காரணங்களால் அம்மாநிலம் பருத்தி விளைச்சலில் (ஹெக்டேருக்கு 700 கிலோ பஞ்சு) முதலிடம் கண்டது.

முதலிடம் வந்த குஜராத், "சாதகமான பருவ நிலை, இயற்கையாகவே பூச்சித் தாக்குதல் குறைவாக இருந்தது போன்றவைகளே விளைச்சல் உயர்வுக்குக் காரணம் என்றும் பி.ட்டி அல்ல' என்றும் மத்திய அரசுக்கு எழுதியது.

இந்தியாவெங்கும் இந்நிலை இருந்திருக்கிறது. அனைத்திந்திய ஒருங்கிணைந்த பருத்தி மேம்பாட்டுத் திட்டம் தனது 2002-க்குப் பிந்தைய அறிக்கைகளில், பொதுவாகவே காய்ப்புழுக்களின் தாக்குதல் குறைவாகவே காணப்படுகிறது என்கிறது. அதாவது பி.ட்டி அறிமுகமான ஆண்டிலிருந்தே இயற்கையாகவே காய்ப்புழுக்களின் தாக்குதல் குறைவாக இருக்க மான்சான்டோ அதை பி.ட்டியால்தான் என்று விளம்பரப்படுத்தியது.

குஜராத்தின் விளைச்சலில் 84 சதவீதம் பருத்தி 65 சதவீதம் அளவிலான பாசனப் பரப்பிலிருந்து ஹெக்டேருக்கு 689 கிலோவாக இருக்க, 35 சதவீதம் மானாவாரிப் பரப்பிலிருந்தோ 16 சதவீதம் அளவில் ஹெக்டேருக்கு 247 கிலோ பருத்தி கிடைக்கிறது. பாசன வசதியால் குஜராத் முதலிடம் பெற்றது.

நெடுங்காலமாகவே பருத்தி, விதை நேர்த்தியின்றியே விதைக்கப்பட்டு வந்தது. இதனால் சுமார் 20-30 சதவீதம் இளம் பயிர்கள் பூச்சிகளுக்கு இரையாயின.

2000-ல் இமிடோகுளோபிரிட் என்ற பூச்சிக்கொல்லி விதை நேர்த்திகென வந்தது. இமிடோகுளோபிரிட் இளம் செடிகளை 40-45 நாள்களுக்கு பல வகையான பூச்சிகளிடமிருந்து காத்தது.

இமிடோகுளோபிரிட் விதை நேர்த்தியால் விளைச்சல் சுமார் 20-30 சதவீதம் அதிகரிக்கிறது என மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம் ஏற்கெனவே கண்டறிந்ததால் இமிடோகுளோபிரிட் பூசப்பட்ட பி.ட்டி ஹைபிரீடு விதைகளை மட்டுமே நிறுவனங்கள் விற்றன. இமிடோகுளோபிரிட் தந்த 20-30 சதவீதம் கூடுதல் விளைச்சலை பி.ட்டி நிறுவனங்கள் "பி.ட்டியால்' என்றன.

விளைச்சல் உயர்வுக்கு ரசாயன உரப் பயன்பாடும் ஒரு காரணம். பி.ட்டி ஹைபிரீடுகள் அதிக ரசாயன உரமிட்டால் மட்டுமே அதிகம் விளையும்.

2005-ல் 4 சதவீதமாக இருந்த பி.ட்டியின் பரப்பு 10 சதவீதத்துக்கு உயரும்போது ரசாயன உரப் பயன்பாடு 107 சதவீதம் உயரும் என்றார் மரபணு மாற்றுத் தொழில்நுட்ப அங்கீகாரக் குழுவின் இணைத் தலைவராக இருந்த சி.டி.மாயி.

ஆந்திர விவசாயப் பல்கலைக் கழகமோ பி.ட்டிக்கு 15 சதவீதம் கூடுதல் ரசாயன உரம் தேவை என்கிறது. ஆக இந்தியா பருத்தி விளைச்சலில் ஏற்றம் கண்டதற்கு ஹைபிரீடுகள், பாசன வசதி, விதை நேர்த்தி, காய்புழுத் தாக்குதல் குறைவாக இருந்தது, பொய்க்காத மழை ஆகியவைகளே ஒழிய பி.ட்டியல்ல.

பூச்சிக் கொல்லிகள் பயன்பாட்டைக் குறைக்கவே என்று கூறி வந்த பி.ட்டி இதையாவது செய்ததா? இந்தியாவில் தெளிக்கப்படும் மொத்த பூச்சிக்கொல்லிகளில் 50 சதவீதத்துக்கும் மேல் 5 சதவீதம் பரப்பிலுள்ள பருத்தியில்.

ஆனாலும் காய்ப்புழுக்கள் எதிர்ப்பு சக்தியைத் தொடந்து உருவாக்கிக் கொண்டதால், கொள்வதால் கட்டுப்படவேயில்லை.

பி.ட்டி பருத்தி வந்தால் பருத்தியில் பூச்சிக்கொல்லிகளின் அளவு குறையும், புதிய விடிவு மலரும் என்று விதை நிறுவனங்கள் மற்றும் அவர்களுக்கான நம் விஞ்ஞானிகளும் கூற ஆட்சியாளர்களும் விவசாயிகளும் நம்பினார்கள்.

ஆனால், 10 அண்டுகள் நிறைவில் இந்திய பயிர் பாதுகாப்பு இயக்குநரகமோ பருத்தியை முக்கிய பயிராகக் கொண்ட குஜராத், மகாராஷ்டிரம், கர்நாடகம், பஞ்சாப் மற்றும் ஆந்திர மாநிலங்களில் ஆந்திரம் தவிர்த்து பிற மாநிலங்களில் பருத்தியில் பூச்சிக்கொல்லிகள் பயன்பாடு அதிகரித்துள்ளது என்கிறது.

உண்மையில் பி.ட்டி பரப்பு அதிகமுள்ள மாநிலங்களில் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது. ஆந்திரத்தில் குறைந்ததற்குக் காரணம் அந்த அரசு பரப்பிய பூச்சிக்கொல்லியில்லாத - பூச்சிக் கட்டுப்பாட்டு முறையேயொழிய பி.ட்டியல்ல.

இதுமட்டுமல்ல, மான்சான்டோவின் விதை மட்டுமே இருக்க வேண்டும் என்பதற்காக தார்வாட் பல்கலைக்கழகம் உருவாக்கிய பி.ட்டி பருத்தி ரகம் தடுத்து நிறுத்தப்பட்டதும், காய்ப்புழுக்கள் பி.ட்டிக்கு எதிர்ப்பு சக்தி பெற்றது எனப் பலவும் இந்தப் பத்தாண்டுகளில் நடந்துள்ளது.

பாரம்பரியப் பருத்தி விதைகளை இழந்ததும், 2 லட்சம் விவசாயிகளைக் கொன்றதும், வேளாண் பல்கலைக்கழகங்களை மான்சான்டோ பல்கலைக் கழகங்களாக்கியதும், மரபணு மாற்றம் மட்டுமே இந்திய விவசாயத்தைக் காக்கும் நுட்பம் என்று நம் விஞ்ஞானிகள் (???) மூளைச் சலவைக்குள்ளானதும், படித்தவர்களோ நவீனம், அறிவியல் என்ற முத்திரை குத்தினால் மூளையை மறுத்து முட்டாள்களானதும் பி.ட்டி பருத்தியின் 10 ஆண்டுகள் நமக்குச் சொல்வது.

""ரசாயனங்களால் பாதிப்புறாத வளமான நிலம், பாசன வசதி,
விதை நேர்த்தி செய்யப்பட்ட ஹைபிரீடுகள் போன்ற
காரணங்களால் குஜராத் பருத்தி விளைச்சலில்

(ஹெக்டேருக்கு 700 கிலோ பஞ்சு) முதலிடம் கண்டது"

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

First Published : 28 Aug 2012 02:24:17 AM IST



மேட்டூர், ஆக 27: மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கர்நாடகத்தில் உள்ள கபினி அணைக்கு நீர்வரத்து குறைந்தால் திறக்கப்பட்ட உபரி நீர் நிறுத்தப்பட்டது. இதனால், மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 1000 கன அடிக்குக் குறைவாகவே தண்ணீர் வந்துகொண்டிருந்தது.

இந்த நிலையில் காவிரியின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் கடந்த இரு தினங்களாக லேசான மழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை மாலை விநாடிக்கு 1,193 கன அடி நீர் வந்துகொண்டிருந்தது. இது திங்கள்கிழமை மாலை விநாடிக்கு 1,543 கன அடியாக அதிகரித்தது. திங்கள்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 76.32 அடியாக இருந்தது. குடிநீர்த் தேவைக்காக வினாடிக்கு 2,006 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. நீர் இருப்பு 38.38 டி.எம்.சியாக இருந்தது. கடந்த 8 நாள்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் சுமார் 1 அடி குறைந்துள்ளது.

## சொட்டுநீர்ப் பாசன மானியத்தில் முறைகேடு நடந்தது உண்மை: விசாரணை அறிக்கையில் தகவல்

First Published : 28 Aug 2012 02:45:48 AM IST

நாமக்கல், ஆக.27: நாமக்கல் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சொட்டு நீர்ப் பாசன மானியத்தில் முறைகேடுகள் செய்த அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாமக்கல் ஆட்சியர் ஜெ.குமரகுருபரன் தெரிவித்தார்.

தோட்டக்கலைத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் சொட்டு நீர்ப் பாசனத் திட்டத்தின் மூலம் நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 2007-ம் ஆண்டு முதல் 2012-ம் ஆண்டு வரை விவசாயிகளுக்கு ரூ.20.58 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

அதில், நிலங்கள் இல்லாத விவசாயிகள் பெயரிலும், போலியாக ஆவணங்கள் தயாரித்தும் சுமார் 40 சதம் அளவுக்கு மோசடிகள் நடந்திருப்பதாக ஓய்வுபெற்ற வேளாண் அலுவலர் எம்.மகாலிங்கம்,

ஆட்சியர் ஜெ.குமரகுருபரனிடம் புகார் அளித்ததுடன், மனுவை முதல்வரின் தனிப் பிரிவுக்கும் அனுப்பியிருந்தார்.

தொடர்ந்து, ஆட்சியரின் உத்தரவின் பேரில் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) பிரபாகரன் தலைமையில் 7 குழுக்களும், தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் முத்துச்சாமி தலைமையில் 6 பேர் கொண்ட குழுக்களும் தனித்தனியாக நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை தவிர 14 ஒன்றியங்களிலும் தீவிர விசாரணை மேற்கொண்டன.

கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமை நடைபெற்ற இந்த விசாரணையைத் தொடர்ந்து முத்துச்சாமி தலைமையில் குழு சென்னை சென்றனர். பிரபாகரன் தலைமையிலான குழு தங்களது விசாரணை அறிக்கையை ஆட்சியரிடம் திங்கள்கிழமை அளித்தனர்.

அந்த அறிக்கை அடிப்படையில் ஒரு சில இடங்களில் முறைகேடுகள் நடந்திருப்பது தெரியவந்துள்ளது. எனினும், மகாலிங்கம் அளித்த புகாரின் அடிப்படையில் கோடிக்கணக்கில் மோசடிகள் நடந்திருப்பதாக உறுதிசெய்யப்படவில்லை என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது: சொட்டு நீர்ப் பாசனத் திட்டம் நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை தவிர மற்ற 14 ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கருவிகள் விநியோகிக்க 19 நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டன.

திட்ட மானியத்தில் மோசடிகள் நடந்துள்ளதாக வந்த புகாரின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில், எலச்சிப்பாளையம் ஒன்றியத்திலும், மல்லசமுத்திரம் ஒன்றியத்திலும் போலியாக 5 நபர்கள் பெயரில் மானியம் பெற்றிருப்பது தெரியவந்துள்ளது.

எலச்சிப்பாளையம் ஒன்றியத்தில் 2010-11-ம் ஆண்டு வழங்க வேண்டிய சொட்டு நீர்ப் பாசனத் திட்டக் கருவிகளை இதுவரை வழங்காமல் ஆய்வுக் குழு அமைத்த பிறகு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், எலச்சிப்பாளையம் ஒன்றியத்தில் 16 மிமீ குழாய்களுக்கு பதிலாக 12 மிமீ குழாய்கள் மட்டுமே வழங்கப்பட்டு 5 இடங்களில் முறைகேடுகள் செய்யப் பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் 7 இடங்களில் இதுவரை கருவிகள் அளிக்காமலும், பரமத்தி, கபிலர்மலை ஒன்றியங்களில் விவசாயிகள் செலுத்திய பங்குத் தொகைக்கு ரசீதுகள் வழங்கப்படாமல் இருப்பதும் தெரியவந்துள்ளது.

7 ஆய்வுக் குழுவினர் குறிப்பிட்ட அளவில் நடத்திய விசாரணையில் ஒரு சில இடங்களில் முறைகேடுகள் நடந்திருப்பது தெரியவந்துள்ளது. இதையே தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் முத்துச்சாமி தலைமையிலான குழுவும் தெரிவித்துள்ளது.

எனினும், எலச்சிப்பாளையம், மல்லசமுத்திரத்தில் அதிகளவில் முறைகேடுகள் பதிவாகியுள்ளதால் அந்த இரு ஒன்றியங்களிலும் மீண்டும் முழுமையான விசாரணை நடத்தப்படும்.

மற்ற ஒன்றியங்களில் மறு விசாரணை நடத்தி இறுதி முடிவுகள் தெரிவிக்கப்படும். அத்துடன், முறைகேட்டில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்கவும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படும்.

இந்தப் பிரச்னையைத் தொடர்ந்து 2011-12-ம் ஆண்டுக்கான மானியத்தை விவசாயிகளிடம் இருந்து முழுமையான சான்று, புகைப்படம் பெற்ற பிறகே வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் குமரகுருபரன்.

## இறால் மீன் கிலோவுக்கு ரூ. 100 குறைவு: ராமேசுவரம் மீனவர்கள் அதிர்ச்சி

First Published : 27 Aug 2012 02:30:43 PM IST

ராமேசுவரம், ஆக. 26: ராமேசுவரத்தில் ஒரு கிலோ இறால் மீனுக்கு ரூ. 100 விலை வீழ்ச்சியால் மீனவர்கள் ஞாயிற்றுக்கிழமை அதிர்ச்சி அடைந்தனர்.

ராமேசுவரம் தீவில் சுமார் 1200 விசைப் படகுகளில் 8 ஆயிரம் மீனவர்கள் மீன் பிடித் தொழிலில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றனர். இம்மீனவர்கள் பெரும்பாலும் விலையுர்ந்த இறால், கணவாய் மீன்களை மட்டுமே பிடிப்பார்கள்.

இம்மீன்களை தூத்துக்குடியில் உள்ள ஏற்றுமதி நிறுவன உரிமையாளர்கள் தூத்துக்குடி துறைமுகம் வழியாக ஹாங்காங், சிங்கப்பூர், அமெரிக்கா, அரபு நாடுகள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

இதனால் ஒரு கிலோ இறால் மீன்களுக்கு ரூ. 420 முதல் 520 வரையும், கணவாய் மீன்களுக்கு ரூ. 170 என ஏற்றுமதியாளர்கள் நிர்ணயித்து ராமேசுவரம் மீனவர்களிடம் மீன்களை கொள்முதல் செய்து வந்தனர்.

இந் நிலையில் ஞாயிற்றுக்கிழமை மீன் பிடித்து விட்டு கரை திரும்பிய ராமேசுவரம் மீனவர்கள், மீன்களின் விலை வீழ்ச்சியால் அதிர்ச்சி அடைந்தனர்.

இம்மீனவர்கள் பிடித்து வந்த ஒரு கிலோ இறால் மீன்களுக்கு ரூ. 320 முதல் 420 வரையும், கணவாய் மீன்களுக்கு ரூ. 120 என ஏற்றுமதியாளர்கள் விலை நிர்ணயித்து, மீன்களை வாங்கி சென்றனர்.

இதுகுறித்து ராமேசுவரம் மீனவர்கள் கூறியதாவது:

மீன்பிடித்து விட்டு கரை திரும்பும் ஒரு படகிற்கு எரிபொருள், ஐஸ் கட்டி, உணவு, மீனவர் கூலி சேர்த்து ரூ. 16 ஆயிரம் வரை செலவிடப்படுகிறது.

தற்போது ஒரு கிலோ இறாலுக்கு ரூ. 100-ம், ஒரு கிலோ கணவாய்க்கு ரூ. 50 வரை விலை குறைத்துள்ளதால், மீன்பிடித் தொழிலில் பெரும் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது.

கடந்த ஜூலை மாதம் இறால் மீன்களுக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டு, மீனவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அப்போது சென்னையில் மீன்துறை அமைச்சர் தலைமையில் ஏற்றுமதியாளர்கள்

மற்றும் மீனவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். அதில் இறால் மீனுக்கு நியாயமான விலை கிடைக்க அமைச்சர் உறுதி அளித்தார்.

ஆனால், அமைச்சரின் பேச்சு வார்த்தையை மீறி, மீண்டும் இறால் மீன்களுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளதால், தொடர்ந்து மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

ஏற்கெனவே, இலங்கை கடற்படையால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள நிலையில், தற்போது மீன்களின் விலை வீழ்ச்சியால் எங்களது குடும்பங்கள் கடன் வாங்கி செலவு செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இப்பிரச்னைக்கு தீர்வு காண தமிழக முதல்வர் ஏற்றுமதியாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, மீன்களுக்கு நியாயமான விலை கிடைத்திட உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## ஜப்பானிய காடை, வான்கோழி வளர்க்க இலவசப் பயிற்சி

First Published : 27 Aug 2012 11:01:02 AM IST

நாமக்கல், ஆக.26: ஜப்பானிய காடை மற்றும் வான்கோழி வளர்ப்பும், மூலிகை முதலுதவி மருத்துவமும் குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி நாமக்கல்லில் வெள்ளிக்கிழமை (ஆக.31) நடைபெறுகிறது.

திருச்சி சாலை கால்நடை மருத்துவமனை வளாகத்திலுள்ள கோழிகளுக்கான மரபுசார் மூலிகை ஆராய்ச்சி மையத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சி வகுப்பில் பங்கேற்க விரும்பும் கோழிப்பண்ணையாளர்கள், வளர்ப்பவர்கள் மற்றும் பண்ணை அமைக்க விருப்பமுள்ள தொழில் முனைவோர்கள் பயிற்சி மையத்தை நேரிலோ அல்லது 04286 233230, 94862 42799 என்ற தொலைபேசி எண்களிலோ வியாழக்கிழமை (ஆக.30) மாலைக்குள் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ள வேண்டும் என பயிற்சி மையத் தலைவர் பா.மோகன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோழிப்பண்ணை அமைக்க மானியத்துடன் அரசு உதவி

First Published : 27 Aug 2012 03:43:19 PM IST

புதுக்கோட்டை, ஆக. 26: கிராமங்களில் கோழிப் பண்ணை அமைக்க அரசு மானியத்துடன் நிதியுதவி அளிப்பதாக மாவட்ட ஆட்சியர் வி. கலைஅரசி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கோழிப் பண்ணை தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு புதுக்கோட்டை மாவட்டத்தில் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நாட்டுக்கோழி பண்ணைகள் அமைக்க விருப்பம் உள்ளவர்களுக்கு அரசின் சார்பில் கோழிப்பண்ணை கொட்டகை அமைப்பதற்கு ஆகும் செலவில் 25% மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், நபார்டு வங்கியின் கோழி துணிகர முதலீட்டு நிதியிலிருந்து 25% மானியம் உள்பட மொத்தம் 50% மானியமாக அரசிடமிருந்தும், மீதமுள்ள 50% பயனாளிகள் தங்கள் சொந்த செலவிலோ அல்லது வங்கிக் கடனாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

நாட்டுக்கோழி வளர்ப்புத் தொழிலில் ஆண்டு முழுவதும் விவசாயிகள் ஈடுபடுவதை ஊக்கப்படுத்தும் நோக்கில் இரண்டாம் தொகுப்பு கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில் அரசின் சார்பில் 50% மானியமும், மூன்றாம் தொகுப்பு கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில் 30% மானியமும் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தில் விவசாயிகள், தனிநபர் தொழில்முனைவோர், சுய உதவிக் குழுக்கள் இதில் பயன்பெறத் தகுதியானவர்கள். கோழிப்பண்ணை அமைக்க போதிய நிலம் தங்கள் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருக்க வேண்டும்.

கோழி வளர்ப்பில் முன் அனுபவம் உள்ளவர்களும், ஏற்கெனவே கொட்டகை அமைத்த பயனாளிகள் புதிய கொட்டகை அமைத்துக் கொள்ளவும், கோழிப் பண்ணையை விரிவாக்கம் செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளும் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் 5 நாட்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும்.

தகுதியும், ஆர்வமும் உள்ள பயனாளிகள், மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளரின் கடிதம், ஆட்சியரால் தேர்வுசெய்யப்பட்ட வங்கியிலிருந்து ஒப்புதல் கடிதம், சொந்த நிலத்திற்கான சான்றுகளுடன் விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அளிக்கலாம்.

## மரம் நடும் திட்டத்தில் முறைகேடு: விவசாயிகள் புகார்

First Published : 27 Aug 2012 03:29:17 PM IST

பெரம்பலூர், ஆக. 26: பெரம்பலூர் மாவட்டத்தில், மரக்கன்று நடும் திட்டத்தில் நடந்த முறைகேடுகளை விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

விவசாய சங்க பிரதிநிதிகள் ஆர். ராஜசிதம்பரம், அ. வேணுகோபால், என். செல்லதுரை, ஏ.கே. ராஜேந்திரன், கு. வரதராஜன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் தரேஷ் அஹமதுவிடம் அளித்துள்ள புகார் மனுவில் தெரிவித்துள்ளதாவது: தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் 64-வது பிறந்த

நாளையொட்டி, மாவட்டம் முழுவதும் மரக் கன்றுகள் நடும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக 2 லட்சம் மரக்கன்றுகள் வனத்துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஒரு மரக்கன்றை நடவுசெய்ய ரூ. 34 வீதம் 2 லட்சம் மரக்கன்றுகளுக்கு ரூ. 68 லட்சமும், 3 மாதங்கள் தண்ணீர் விட்டு பராமரிக்க ரூ. 12 வீதம் ரூ. 24 லட்சமும் என மொத்தம் ரூ. 92 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மார்ச் மாதம் வனத்துறை மூலம் செலவழிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை எந்தெந்தப் பகுதியில் எவ்வளவு மரக்கன்றுகள் நடப்பட்டன என்ற தகவல் தெரிவிக்கப்படவில்லை. எனவே, இத்திட்டத்தில் முறைகேடு நடந்திருக்கலாம். இதுகுறித்து, விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் வருவாய் துறையினர் அடங்கிய குழு ஒன்றை அமைத்து ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேபோல செஞ்சேரி, நெய்குப்பை, நக்கசேலம், ஆய்குடி உள்பட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள ஏரிகளில், கருவேல மரங்களை ஏலம் விடாமல் வெட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது குறித்தும் உரிய விசாரணை நடத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 76.38 அடி

First Published : 27 Aug 2012 03:45:11 PM IST

தஞ்சாவூர், ஆக. 26: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 76.38 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1193 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை.

## திருந்திய நெல் சாகுபடி பயிற்சி

First Published : 27 Aug 2012 03:42:22 PM IST

புதுக்கோட்டை, ஆக. 26: புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில், விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி நற்பவளக்குடி கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் (பொ) மற்றும் உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் பி. எம்பெருமாள் பயிற்சியை தொடக்கி வைத்தார்.

தரமான விதைகள் மற்றும் விதைநேர்த்தி செய்வது, தேவைக்கேற்ப உரங்கள் பயன்படுத்துவது, மண் ஆய்வு குறித்து உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் எஸ். ராஜசேகரன் விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

அரசு செயல்படுத்தும் திட்டங்கள், வேளாண் விரிவாக்க மையத்தில் கிடைக்கும் இடுபொருள்கள் விவரங்கள், நேரடி நெல் விதைப்பு குறித்த தொழில்நுட்பங்கள் குறித்து அறந்தாங்கி வேளாண் உதவி இயக்குநர் வெ. பொன்னையா விளக்கினார்.

பூச்சிநோய் தாக்குதலை வருமுன் காப்பதற்கு வேம்பு எண்ணெய் கரைசல் தெளிப்பது குறித்து உழவர் மன்ற அமைப்பாளர் கோயில்கோட்டை கணேசன் செயல் விளக்கம் மூலம் கூறினார்.

இதில் தோட்டக்கலை துறை, கால்நடை பராமரிப்பு துறை, கூட்டுறவுத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டு தங்கள் துறை சார்ந்த திட்டங்களை விவசாயிகளுக்கு விளக்கினர்.

ஏற்பாடுகளை உழவர் மன்ற அமைப்பாளர்கள் கணேசன், சோலைமுத்து, உதவி வேளாண் அலுவலர் வனிதா, ரஜினிகாந்த் ஆகியோர் செய்திருந்தனர்.

## தேயிலைத் தோட்டங்களில் கவாத்து பணி தீவிரம்

First Published : 27 Aug 2012 11:58:44 AM IST

வால்பாறை, ஆக. 26: வால்பாறை பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் கவாத்து வெட்டும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தேயிலைச் செடிகளைப் பராமரிக்கும் முறையே டீத்தூளின் தரத்தையும், சுவையையும் நிர்ணயிக்கிறது. வால்பாறை தேயிலைத் தோட்டங்களில், சுமார் 4 வயதுடைய தேயிலைச் செடிகள் மிகுந்த உயரமாக இருப்பதால், தேயிலை பறிக்கும் தொழிலாளர்கள் சிரமப்படுகின்றனர்.

மேலும், உற்பத்தித் தரமும் குறைவாக இருக்கிறது. எனவே, அவற்றின் மேல் பகுதியை கவாத்து இயந்திரம் மூலம் வெட்டி விடுகின்றனர். இதனால், செடிகள் நல்ல முறையில் வளர்ந்து தேயிலை உற்பத்தி அதிகரிக்கும் என்று தோட்ட நிர்வாகிகள் தெரிவித்தனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கணக்கில் வரவு : "தானே'வால் பாதிக்கப்பட்ட 21,000 விவசாயிகள் பயன்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2012,03:17 IST

மாவட்டத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட 21000 நெல் பயிரிடும் விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். கனமழை, வெள்ளம், புயல், கொடிய நோய் போன்ற இயற்கை இடற்பாடுகளினால் நெற்பயிர் பாதிக்கப்படும்போது ஏற்படும் இழப்பினால் விவசாயிகள் துவண்டு விடக்கூடாது என்பதால் காப்பீடு தொகை உதவும் வகையில் தேசிய வேளாண் காப்பீடு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏற்கனவே மாவட்ட அளவில் இருந்து வந்த இத்திட்டம் எளிமையாக்கப்பட்டு வட்டார அளவிலும், வட்டார அளவில் இருந்து குறுவட்ட அளவிலும், தற்போது திருத்தியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் கிராம அளவில் சோதனைகள் செய்யப்பட்டு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் தமிழகத்தில் பரிச்சாத்தமாக நாமக்கல், சிவகங்கை, கடலூர் மாவட்டத்தில் செயல்படுத்த மத்திய அரசு உத்தரவிட்டது. அதன்படி கிராம அளவில் சோதனை அடிப்படையில் இழப்பீடு தொகை கொடுப்பதாகக் கூறி பிரிமியத் தொகையை 5 சதவீதமாக உயர்த்தியது. இதன்படி ஒரு லட்சம் ரூபாய் கடன் பெறும் விவசாயிகள் 5,000 ரூபாய் பிரிமியம் செலுத்தினர். மீதி தொகையை மத்திய அரசு செலுத்தியது. கடந்த 2011 சம்பா பருவத்தில் 53000 ஏக்கரில் நடவு செய்யப்பட்டிருந்த நெல்லுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்யப்பட்டது. இதில் 20,851 விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீடு பிரிமியத் தொகையை செலுத்தினர். இந்நிலையில் கடந்த டிசம்பர் 30ம் தேதி வீசிய தானே புயல் காரணமாக அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர் கடும் சேதம் அடைந்தன. இதில் 752 கிராமங்கள் கடும் பாதிப்பிற்குள்ளாயின. ஒவ்வொரு கிராமத்திலும் அறுவடையின்போது கிராம நிர்வாக அதிகாரி, உதவி வேளாண் அதிகாரி, வட்டார புள்ளியியல் ஆய்வாளர் ஆகியோர் ஒருங்கிணைந்து அறுவடை செய்யப்படும் நெல்லை ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கினர்.அதில் பெரும்பாலான விவசாயிகளுக்கு 60 சதவீதம் நெல் சேதமடைந்ததாக சான்றிதழ் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் இம் மாவட்டத்தில் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் பணம் செலுத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இந்தத்தொகை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்படவுள்ளன. தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் இருந்து எவ்வளவு கடன் பெற்று

பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை கணக்கிட்டு அவர்களது கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் 20 ஆயிரத்து 851 விவசாயிகள் பயன்பெறுகின்றனர்.

நமது நிருபர்

ஆகஸ்ட் 27,2012,23:41

## உற்பத்தி குறைவால் 3 கோடி டன் யூரியா இறக்குமதி



புதுடில்லி: உள்நாட்டில், யூரியா உற்பத்தி, தேவையை விட குறைவாக உள்ளது. இதனால், மூன்று கோடி டன்னுக்கும் அதிகமாக, யூரியா இறக்குமதி செய்யப்படுகிறது. உள்நாட்டில் யூரியா உற்பத்தி, 2.20 கோடி டன்னாக உள்ளது.பற்றாக்குறையை பூர்த்தி செய்ய, பல்வேறு நாடுகளிலிருந்து, யூரியா உரம் இறக்குமதி செய்யப்படுகிறது. அரசின் முகமை அமைப்புகளான, எம்.எம்.டி.சி., இந்தியன் பொட்டாஷ் மற்றும் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் ஆகியவை, யூரியா உள்ளிட்ட உர வகைகளை இறக்குமதி செய்து, மாநிலங்களின் அங்கீகரிக்கப்பட்ட வினியோகஸ்தர்கள் வாயிலாக, விற்பனைக்கு அனுப்புகின்றன.

கடந்த 2010ம் ஆண்டில், மத்திய அரசு, சில்லரை விற்பனையில் யூரியா உர விலையை டன்னுக்கு, 10 சதவீதம் அதிகரித்து, 5,310 ரூபாயாக உயர்த்தியது.

தற்போதும் இந்த விலையே நீடிக்கிறது. ஆனால், இதை விட ஐந்துமடங்கு அதிக விலையில், தற்போது யூரியா உரம் இறக்குமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட் 27,2012,12:09

**மஞ்சள் விலை குவிண்டால் ரூ.9,000 ஆக நிர்ணயம்**



ஈரோடு : ஈரோட்டில் நடந்த விவசாயிகள் மாநாட்டில், மஞ்சள் விலை குவிண்டால், 9,000 ரூபாயாக நிர்ணயித்து அறிவிக்கப்பட்டது. இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் சார்பில், மஞ்சள் விலை நிர்ணய மாநாடு, ஈரோடு வ.உ.சி., பூங்கா மைதானத்தில் நேற்று இரவு நடந்தது. ஈரோடு எம்.பி., கணேசமூர்த்தி தலைமை வகித்தார். மத்திய வேளாண் துறை இணை அமைச்சர் சரண் தாஸ் மகந்த் பேசியதாவது: வலி நிவாரணியாக இருக்கும் மஞ்சளை சாகுபடி செய்யும் விவசாயிகளின் வலியை போக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். மஞ்சளுக்கு கட்டுப்படியான விலை அறிவிக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன். இந்திய அரசின் புதிய திட்டத்தின் படி, விளைபொருளுக்கு கட்டுப்படியான விலை அறிவிக்கப்படும். மத்திய அரசு, 50 சதவீதமும், மாநில அரசு, 50 சதவீதமும் பங்கேற்கும். இங்கு பேசியவர்கள், "மஞ்சள் சாகுபடி செய்ய குவிண்டாலுக்கு குறைந்தது, 9,000 ரூபாய் செலவாகிறது' என்றனர்.

இதை டில்லியில் எடுத்து சொல்வேன். ஈரோட்டில் உணவுப் பூங்கா அமைப்பதற்கான சாத்தியம் உள்ளது என்பதை தெரிவித்துள்ளனர். வரும் பார்லிமென்ட் கூட்டத் தொடரில் உணவுப்பூங்கா குறித்த திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இதற்கு குறைந்தபட்சம், 50 ஏக்கர் நிலம் வேண்டும். மத்திய அரசு, 50 கோடி ரூபாய் வழங்கும். விளை நிலத்தில் இருந்து நுகர்வோரை சென்றடையும் வரை உள்ள உணவுச்சங்கிலிக்கு, 10 கோடி ரூபாய் தர மத்திய அரசு உள்ளது. இந்தியாவில், 45 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பு காய்கறிகள், பழங்கள், உணவுப் பொருட்கள் வீணாகின்றன. இதைப் பாதுகாக்க மத்திய அரசின் மானியத் திட்டங்கள் ஏராளமாக உள்ளன. அதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். அமைச்சர் பேச்சை முடித்த பிறகு இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி கூறியதாவது:

அமைச்சர் பேசுகையில், மஞ்சள் சாகுபடிக்கு குவிண்டாலுக்கு குறைந்தது, 9,000 ரூபாய் செலவாகிறது என்று கூறியதையே, குறைந்தபட்ச விலையாக ஏற்று அறிவித்து விட்டார். வாரம்

இரு முறை கூடி, விலை நிர்ணயிக்கப்படும். குறைந்தபட்ச விலையான, 9,000 ரூபாய்க்கு குறைவாக மஞ்சளை விற்க வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார். ம.தி.மு.க., பொதுச் செயலர் வைகோ, தென்காசி எம்.பி., லிங்கம், ஆம்பூர் எம்.எல்.ஏ., அஸ்லம் பாஷா, இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத் தலைவர் தெய்வசிகாமணி, உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் செல்லமுத்து, தமிழக விவசாயிகள் சங்க தலைவர் சிவசாமி, "கள்' இயக்க ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி உட்பட பலர் இக்கூட்டத்தில் பேசினர்.

**இறால், வண்ண மீன் பண்ணைகளால் விவசாயம் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2012,07:31 IST

பொன்னேரி:பெருகி வரும் இறால் மற்றும் வண்ண மீன் பண்ணைகளால் விவசாயம் பாதித்து, விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்து வேதனையில் தவிக்கின்றனர். நிலத்தடி நீரும் பாழாகி, பொதுமக்கள் குடிநீருக்காக தவித்து வருகின்றனர்.மீஞ்சூர் ஒன்றியம் அகரம், தேவம்பட்டு, பள்ளிப்பாளையம், பெரியகரும்பூர் ஆகிய கிராமங்களில், 800 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. ஆண்டுதோறும் சம்பா, குறுவை என, இரு பருவங்களில் நெல் பயிரிட்டு விவசாயம் செய்து வந்தனர்.
தற்போது அங்கு, 150 ஏக்கர் நிலப்பரப்பில் இறால் மற்றும் வண்ண கலர் மீன் வளர்ப்பு பண்ணைகள் அமைக்கப்பட்டு உள்ளன. துவக்கத்தில், 10 ஏக்கர் நிலப்பரப்பில் துவங்கப்பட்ட பண்ணைகள் கடந்த, 10 ஆண்டுகளில் 15 மடங்காக பெருகியுள்ளன.இதற்காக நிலத்தின் உரிமையாளருக்கு ஆண்டு தோறும் ஏக்கருக்கு, 20,000 முதல், 50 ஆயிரம் ரூபாய் வரை பணம் கொடுத்து குத்தகைக்கு எடுத்து, இறால் மற்றும் மீன் வளர்ப்பு தொழிலில் ஏராளமானோர் ஈடுபட்டு வருகின்றனர்.

மூன்று மாதத்திற்கு ஒரு முறை அறுவடை செய்து, அதிக லாபம் ஈட்டும் தொழிலாக இது மாறியுள்ளது.விவசாயம் பாதிப்புஇறால் மற்றும் மீன் பண்ணைகளில் அதன் வளர்ச்சிக்காகவும், நோய் தாக்குதல்களை சமாளிக்கவும் சுண்ணாம்பு, உப்பு, துத்தநாகம் மற்றும் ரசாயனக் கலவைகள் தெளிக்கப்படுகின்றன. பண்ணைகளில் இருந்து கழிவுகள் கால்வாய்கள் மூலமாக வெளியேற்றப்படுகின்றன.ரசாயனக் கழிவுகள் பண்ணைகளில் இருந்து வெளியேறி, அருகிலுள்ள குளம், ஏரிகளில் சென்று கலக்கிறது. இதனால் சுற்றியுள்ள விவசாய நிலங்களிலும் கலந்து விளைநிலங்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. நெற்கதிர்களின் வேர்களும் அழுகி, வீணாகிறது. அதிலிருந்து தப்பிப் பிழைக்கும் விளை நிலங்களில் கிடைக்கும் நெல் மணிகளும் தரமற்றவையாக இருப்பதுடன், விளைச்சலும் குறைந்தளவே இருக்கிறது. ஏக்கருக்கு, 30 முதல், 35 மூட்டை வரை

அறுவடை செய்து வந்த விவசாயிகள், தற்போது, 10 முதல், 15 மூட்டை வரை மட்டுமே கிடைப்பதாக வேதனையுடன் கூறுகின்றனர்.உவர்ப்பாக மாறிய குடிநீர்தரமற்ற நெல்லாக கிடைப்பதால், விலையும் குறைவாக உள்ளது. தற்போது மற்ற இடங்களில் நெல் மூட்டை, 1,150 ரூபாய் என்றால், இங்கு, 400 முதல் 500 ரூபாய்க்கே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 10 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்படுகிறது.கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம், தேவம்பட்டு கிராமத்தில், 10 ஆழ்துளை மோட்டார்கள் அமைத்து, அண்ணாமலைச்சேரி, சேலியம்பேடு, அகரம், பூங்குளம், கல்லூரி ஆகிய ஐந்து ஊராட்சிகளில் உள்ள, 30 கிராமங்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. இந்த தண்ணீரும் உவர்ப்பாக மாறியுள்ளது.வசதி படைத்தவர்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை விலை கொடுத்து வாங்கி அருந்துகின்றனர்.விவசாயிகள் வேதனை

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, "இறால் மீன் பண்ணைகளால் விவசாயம் பாதித்துள்ளது குறித்து, மாவட்ட நிர்வாகத்திடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. எங்களது வாழ்வாதாரம் பாதித்துள்ளது. விவசாயம் செய்யும் நாங்கள் வரி செலுத்துகிறோம். எங்கள் தொழிலை அழித்து கொள்ளைலாபம் பார்க்கும் இறால் பண்ணைகள், அரசுக்கு எந்த கட்டணமும் செலுத்துவதில்லை.இறால், மீன் வளர்ப்பு தொழிலுக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களுக்கும், 2010ம் ஆண்டு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது' என்றனர்.

நீர், மண் ஆய்வு பணி

இதுகுறித்து பொன்னேரி ஆர்.டி.ஓ., கந்தசாமி கூறும்போது, "வேளாண்மைத் துறை மூலமாக தேவம்பட்டு பகுதியை சுற்றியுள்ள கிராமங்களில், விளைநிலங்களின் மண்ணை பரிசோதனை செய்யவும், மீன் வளத் துறையினர் மூலமாக இறால் பண்ணைகளிலிருந்து வெளியேறும் நீரை பரிசோதனை செய்யவும், ஆய்வுப் பணிகள் நடந்து வருகின்றன.

இதன் முடிவுகளை அரசிடம் சமர்ப்பித்து விவசாயிகள் பாதிக்காத வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

**குறைந்த செலவில் அதிக மகசூல் பெற நவீன தொழில்நுட்ப சாகுபடி அவசியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2012,03:01 IST

திண்டிவனம் : திண்டிவனத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவு செயல் முறை பயிற்சி விளக்கம் நடந்தது.நெல் சாகுபடியில் இயந்திரமயமாக்கலின் அவசியத்தை விவசாயிகளிடம் பரவலாக்கம் செய்வதற்காக, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், நீர்வள நிலவளத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன்படி திண்டிவனம் சலவாதி ரோடில் உள்ள விவசாயி அண்ணாமலை என்பவரது நிலத்தில், இயந்திரம் மூலம் நெல் நடவு பயிற்சி விளக்க முகாம்

நடந்தது.நிகழ்ச்சியில் திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய தலைவர் சாத்தையா, தலைமை தாங்கி பேசியதாவது: தற்போதைய விவசாயத்திற்கு ஆட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு போன்ற பல்வேறு பிரச்னைகளால், உற்பத்தி குறைந்து, லாபம் பாதிக்கப்படுகிறது. குறைந்த செலவில் அதிக மகசூலும், லாபமும் பெற நவீன தொழில்நுட்பம் அவசியம். பாய் நாற்றங்கால் மூலம் 20 நாட்கள் வளர்ந்த நெல் நாற்றுகளை இயந்திரம் மூலம் நடலாம். இதன் மூலம் சீரான அதிக இடைவெளி விட்டு நடுவதால், தூர் கட்டும் திறன் அதிகரிக்கிறது. மேலும் கோனோவீடர் மூலம் களை அழுத்தப்பட்டு விடுவதால், மண் மற்றும் நீர்வளம் பாதுகாக்கப்படுகிறது எனவும் சாத்தையா தெரிவித்தார்.ஓங்கூர் உபவடிநீர் நிலவள நீர் வளத் திட்ட விஞ்ஞானி அன்புமணி, முன்னோடி விவசாயிகள் பாண்டியன், புகழேந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சொட்டுநீர் பாசன திட்டத்தில் முறைகேடு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2012,04:17 IST

நாமக்கல்: சொட்டுநீர் பாசன திட்டத்தில் நடந்த முறைகேடு தொடர்பாக, நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை, நேற்று, மாவட்ட கலெக்டரிடம் வழங்கப்பட்டது. அந்த அறிக்கையில், எலச்சிபாளையம், மல்லசமுத்திரம் யூனியனில் அதிகளவு மோசடி நடந்திருப்பது தெரியவந்துள்ளது.தமிழக அரசு தோட்டக்கலைத் துறை மூலம் சாகுபடி செய்யப்படும் தென்னை, வாழை, மரவள்ளி, கத்தரி, வெண்டை உள்ளிட்ட பயிர்களுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க மானியம் வழங்குகிறது. அந்த வகையில், நாமக்கல் மாவட்டத்தில், 2007 முதல், 2011 வரை, சொட்டுநீர் பாசனம் அமைக்க, 20.58 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.அதில் பல்வேறு முறைகேடு நடந்துள்ளதாக பரபரப்பு புகார் எழுந்துள்ளது. எட்டு கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடு நடந்திருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. அதையடுத்து, முறைகேடு தொடர்பாக, சென்னை தோட்டக்கலைத்துறை கூடுதல் இயக்குனர் முத்துசாமி தலைமையில், துணை இயக்குனர்கள், உதவி இயக்குனர்கள் என, ஆறு பேர் கொண்டி குழுவினர், நாமக்கல் மாவட்டத்தில் முகாமிட்டு, ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.
தவிர, கலெக்டர் உத்தரவுபடி, நாமக்கல் மாவட்ட வேளாண் துறை அதிகாரிகள் அடங்கிய, ஏழு தனித்தனி குழுவும் அமைக்கப்பட்டு ஆய்வு செய்து வருகின்றனர். அந்த குழுவினர், மாவட்டத்தில் உள்ள, 14 யூனியன்களில் விசாரணை நடத்தினர்.விசாரணையில், ஒருசில யூனியன்களில் சொட்டுநீர் பாசனக் கருவி பெற்ற பட்டியலில் உள்ள விவசாயிகள் அங்கு இல்லை என்பது உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இதனிடையே, முறைகேடு தொடர்பான அறிக்கையை, சம்மந்தப்பட்ட குழுவினர், நேற்று, நாமக்கல் மாவட்ட

கலெக்டரிடம் வழங்கினர்.இதுகுறித்து, கலெக்டர் குமரகுருபரன் கூறியதாவது:நாமக்கல் மாவட்டத்தில், 14 யூனியன்களில் நடந்த முறைகேடு தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட குழுவினர் ஆய்வு செய்தனர்.

அந்த அறிக்கை, தற்போது என்னிடம் வழங்கப்பட்டுள்ளது. எலச்சிபாளையம் யூனியனில், மூன்று இடத்தில், சொட்டூர் பாசன கருவிகள், விசாரணைக்காக குழு அமைத்த பின் வழங்கப்பட்டுள்ளது.அதே யூனியனில், 16 மி.மீ., கொண்ட பைப் வழங்குவதற்கு பதில், 12 மி.மீ., கொண்ட பைப் வழங்கப்பட்டதும் தெரியவந்துள்ளது. அந்த நிறுவனத்தின் பைப் சப்ளை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பரமத்தி, கபிலர்மலை யூனியனில், ரசீது வழங்கவில்லை. எலச்சிபாளையம், மல்லசமுத்திரம் யூனியனில் அதிகளவு முறைகேடு நடந்திருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. அதுதொடர்பாக மீண்டும் விசாரணை நடத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
முறைகேட்டில், அலுவலர்களுக்கு தொடர்பிருப்பது தெரிய வந்ததால், அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள, அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.
இவ்வாறு அவர் கூறினார்.லஞ்ச ஒழிப்பு துறை விசாரணை: "சொட்டுநீர் பாசன திட்ட முறைகேடு தொடர்பான அறிக்கை சேகரிக்கப்பட்டு வருகிறது. அதுதொடர்பாக விசாரிக்க உயரதிகாரிகள் உத்தரவு பிறப்பித்தால், முறைகேடு தொடர்பாக விசாரணை நடத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என, லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு உயர் தொழில் நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2012,04:16 IST

தர்மபுரி: பாலக்கோடு அடுத்த சாஸ்திரமுட்லுவில், வேளாண் துறை சார்பில் உழவர் பயிற்சி மையம் மூலம் விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி நடந்தது.
உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் தலைமை வகித்தார்.
விவசாயிகள் வோளாண் உற்பத்தியை இரு மடங்காகவும், வருமானத்தை மூன்று மடங்காகவும் உயர்த்திட வேளாண் விவசாயிகள் பெற புதிய தொழில் நுட்பங்களான திருந்தி நெல் சாகுபடி, செம்மை கரும்பு சாகுபடி மற்றும் துவரை சாகுபடி குறித்து அவர் பயிற்சி அளித்தார்.
திருந்திய நெல் சாகுபடியில் குறைந்தளவு விதை நெல்லை உப்பு கரைசல் மூலம் தரமான நெல்லை தேர்ந்தெடுத்து விதைப்பதற்கு பயன்படுத்தும் தொழில் நுட்பம், மானாவாரி பயிர்களில் வறட்சி மேலாண்மை முறைகளான சொட்டுநீர் பாசனம் பயன்படுத்துவது குறித்தும், பயிர்களில் சாகுபடி செலவை குறைத்து வருமானத்தை பெருக்கிட ஒருங்கிணைந்த உர நிர்வாகம், பண்ணை முறைகள் குறித்து பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு கூறினார்.குண்டல்பட்டி கால்நடை

ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் மீனலோசனி கால்நடைகளுக்கு பசும் தீவனம் அளிப்பதின் முக்கியத்துவம், பால் உற்பத்தி, பாலில் கொழுப்புச் சத்துகளை உயர்த்துவது குறித்த தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்தார்.

உழவர் பயிற்சி வேளாண் அலுவலர் புவனேஸ்வரி மானாவாரி பயிர்களில் ஊட்டமேற்றிய தொழுஎரு இடுவதன் மூலம் ஏற்படும் நன்மைகள், மற்றும் தயாரிக்கும் முறைகள் குறித்து செயல் விளக்கம் அளித்தார்.தழைச்சத்தினை மண்ணில் நிலை நிறுத்தி பயிர்களின் வறட்சியை தாங்கும் உயிர் உர விதை நேர்த்தி செய்தல், விதை மூலம் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்த உயிரியல் காரணி சூடோமோனாஸ் மூலம் விதை நேர்த்தி செய்தல், தென்னைக்கு டானிக் கட்டுதல் போன்ற தொழில் நுட்பங்கள் குறித்து செயல்முறை விளக்கங்கள் அளித்தார்.
இப்பயிற்சி காரிமங்கலம் அடுத்த அனுமந்தபுரத்திலும் நடந்தது. ஏற்பாடுகளை வட்டார வேளாண் அட்மா திட்ட பணியாளர்கள் செய்திருந்தனர்.

**கொப்பரை முறைகேடுதொடரும் புகார்கள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2012,04:31 IST

ஈரோடு: சென்னிமலை, "நந்து கோப்ரா பவுல்டரி மற்றும் கேட்டில் ஃபார்ம்ஸ்' நிறுவனம் மீது, 700க்கும் மேற்பட்ட புகார்கள் குவிந்துள்ளன.ஈரோடு ஈமு கோழி பண்ணைகள் மூடப்பட்டதை அடுத்து, கொப்பரை நிறுவனம் மீது புகார் எழுந்துள்ளது. சென்னிமலை, "நந்து கோப்ரா, பவுல்டரி மற்றும் கேட்டில் ஃபார்ம்ஸ்' நிறுவனத்தில், ஈரோட்டை சேர்ந்த, 800க்கும் மேற்பட்டோர் முதலீடு செய்துள்ளனர்.ஆகஸ்ட் மாதம் முதல் வாரம் ஊக்கத்தொகைக்கு கொடுக்கப்பட்ட செக், பணமின்றி திரும்பியதால் அதிர்ச்சியடைந்த முதலீட்டாளர்கள், உரிமையாளரை நேரில் சந்திக்க சென்ற போது தலைமறைவானது தெரியவந்தது. தொடர்ந்து, ஈரோடு பொருளாதார குற்றப்பிரிவு போலீஸில் புகார்கள் குவிந்தன. நேற்று காலையும், ஏராளமானோர் புகார் அளித்தனர். இதுவரை, 700க்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளன.

**ரூ. 9,000க்கு குறைவாக மஞ்சள் விற்க வேண்டாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2012,04:31 IST

ஈரோடு: விவசாயிகள், 9,000 ரூபாய்க்கு குறைவாக மஞ்சளை விற்க வேண்டாமென, மஞ்சள் விவசாயிகள் சங்கத்தினர், ஈரோடு மஞ்சள் வணிகர் மற்றும் கிடங்கு உரிமையாளர் சங்கத்தின்

முன் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.அகில இந்திய விவசாயிகள் சங்கம் சார்பில், மஞ்சள் விலை நிர்ணய பேரணி மற்றும் மாநாடு ஈரோட்டில் நடந்தது. மஞ்சளுக்கு, குவிண்டால், 9,000 ரூபாய் விலை நிர்ணயம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விவசாயிகள், 9,000 ரூபாய்க்கு குறைவாக மஞ்சளை விற்க வேண்டாம் என, கேட்டுக் கொள்ளப்பட்டது.
ஈரோடு பார்க் ரோட்டிலுள்ள மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்கம் முன், மஞ்சள் விவசாயிகள் சங்க அகில இந்திய தலைவர் தெய்வசிகாமணி, காசியண்ண கவுண்டர் தலைமையில் சங்கத்தினர் நேற்று காலை திரண்டனர்.மஞ்சளை விற்க வந்த விவசாயிகளிடம், "9,000 ரூபாய்க்கு குறைவாக விற்க வேண்டாம்' என, அவர்கள் பிரச்சாரம் செய்தனர். காலை, 10 மணியளவில் வழக்கம் போல சங்கத்தில் ஏலம் துவங்கியது. 200 மஞ்சள் மாதிரிகள் வைக்கப்பட்டிருந்தன. ஆனால், வந்திருந்த விவசாயிகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.நீண்ட நேரம் விவசாயிகள் சங்கத்தினர் வெளியே நின்று பிரச்சாரம் செய்த போதும், அவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வணிகர் சங்கத்தினர் முன் வரவில்லையெனக் கூறி, வணிகர் சங்கத்துக்கு எதிராக விவசாயிகள் கோஷம் எழுப்பினர்.விவசாயிகள் சங்கத் தலைவர் தெய்வசிகாமணி கூறியதாவது:நாங்கள் கூறியதை ஏற்று பெரும்பாலான விவசாயிகள், 9,000 ரூபாய்க்கு குறைவாக மஞ்சளை விற்க முன் வரவில்லை.

வெளியூர் விவசாயிகளிடம் விஷயத்தை கூறியதும், ஏற்கனவே வணிகர் சங்கத்தில் மாதிரி வைத்திருந்த போதும், விற்பனை செய்யவில்லை. 200 மாதிரிகள் வந்துள்ளதாக வணிகர் சங்கத்தில் எழுதியுள்ளனர். இங்கு வந்துள்ள விவசாயிகளின் எண்ணிக்கையோ மிக குறைவாகத்தான் உள்ளது.வியாபாரிகள் முன்பு குறைந்த விலைக்கு வாங்கிய மஞ்சளை, விவசாயிகள் வைத்த மாதிரி போல காண்பித்து, குறைந்த விலைக்கு ஏலம் நடத்துகின்றனர். இவ்வளவு பேர் இங்கு நின்றும், பேச்சுவார்த்தைக்கு கூட அழைக்கவில்லை.இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து, வணிகர் சங்கத்தினரிடம் கோரிக்கை மனுவை கொடுத்தனர்.வணிகர் சங்கத் தலைவர் ரவிசங்கர் கூறியதாவது:ஏலம் முடிந்த பின், விவசாயிகள் சங்க நிர்வாகிகளுடன் பேச்சு நடத்தினோம். அவர்கள், 9,000 ரூபாய் விலை கேட்கின்றனர். அனைத்து விவசாயிகளின் மாதிரி அட்டையிலேயே எதிர்பார்க்கும் விலையை, 9,000 ரூபாயாக எழுதிவிட கோரினர். 9,000 ரூபாய்க்கு குறைவாக வியாபாரிகள் கேட்டால், விற்பனை செய்ய வேண்டாமென கூறுகின்றனர். இது, நடைமுறையில் சாத்தியமாகுமா? என, தெரியவில்லை.இன்று (நேற்று) வழக்கம் போல ஏலம் நடந்தது. எவ்வித பாதிப்பும் இல்லை. 700 மூடை மஞ்சள் வரத்து வந்து, 350 மூட்டை விற்பனையானது. 6,100 முதல் 6,400 ரூபாய் வரை விலைபோனது.இவ்வாறு அவர் கூறினார்.வெளியூர் விவசாயிகள் கூறுகையில், "மஞ்சள் மூட்டைகளை நேற்றே (முன்தினம்) விற்பனைக்கு கொண்டு வந்துவிட்டோம்.குறைந்த விலைக்கு விற்க வேண்டாமென விவசாயிகள்

சங்கத்தினர் கூறியதால், மஞ்சளை விற்கவில்லை' என்றனர். இதுபோல், ஈரோட்டிலுள்ள பிற மூன்று ஏல மையங்களிலும், விவசாயிகள் சங்கத்தினர் பிரச்சாரம் செய்தனர்.

**கால்நடை சிறப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2012,05:47 IST

வேதாரண்யம்: வேதாரண்யம் புஷ்பவனம் பஞ்., அலுவலக வளாகத்தில் கால்நடைத்துறை சார்பில் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது.
இதில், நாகை மண்டல கால்நடைத்துறை இணைஇயக்குனர் பிருதிவிராஜ் தலைமை வகித்தார். உதவி இயக்குனர் மனோகரன் வரவேற்றார். பஞ்., யூனியன் தலைவர் சுசீலாதேவி, பஞ்., தலைவர் தமிழரசி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இம்முகாமை எம்.எல்.ஏ., காமராஜ் துவக்கி வைத்து, 3 பயனாளிகளுக்கு புல் வெட்டும் கருவியை வழங்கினார். தேத்தாக்குடி வடக்கு கால்நடை மருத்துவர் சுப்பையன் தலைமையில் குழுவினர் 144 கால்நடைக்கு சிகிச்சையும், 1,123 கால்நடைக்கு குடற்புழு நீக்கம் செய்தனர்.நடமாடும் கால்நடை மருத்துவர் சொக்கலிங்கம் நன்றி கூறினார்.

**மரக்கன்றுகள் நடும்விழா**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 28,2012,04:35 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் கூட்டுறவு துறை சார்பாக மரக்கன்றுகள் நடும்விழா நடந்தது.சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2012 கொண்டாட்டம் தொடர்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் கூட்டுறவு துறையின் சார்பாக 45000 மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான தொடக்க விழாவில் மீளவிட்டான் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க வளாகம், மீளவிட்டான் துவக்கப்பள்ளி மற்றும் ஆலய வளாகத்தில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செல்லப்பாண்டியன் கலந்து கொண்டு மரக்கன்றுகள் நட்டார். மேலும் சங்க உறுப்பினர்கள் சுமார் 200 பேருக்கு அமைச்சர் மரக்கன்றுகளை வழங்கினார். தவிர சங்கத்தில் உள்ள 2 சுய உதவி குழுக்களுக்கு ரூ.2.50 இலட்சம் கடன் உதவியும், 40 சுய உதவிகுழு உறுப்பினர்களுக்கு ரூ.57 ஆயிரத்து 964 பங்கு ஈவுத்தொகயும் வழங்கினர். தூத்துக்குடி மண்டல இணைப்பதிவாளர் பாண்டியன், தூத்துக்குடி சரக துணைப்பதிவாளர் முத்துகிருஷ்ணன், தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் கணேஷ் சேதுராமலிங்கம், சங்கத்தின் தனி அலுவலர் சுப்பிரமணியன், செயலாளர் சுதாகர், உதவி செயலாளர் முருகேசன், வடக்கு

மண்டல தலைவர் கோகிலா, மாமன்ற உறுப்பினர்கள் பொன்ராஜ், செல்வராஜ், ஆழ்வை பெரும் தலைவர் விஜயக்குமார் மாமன்ற உறுப்பினர் தனம் சங்க பணியாளர்கள், சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தினகரன்

தர்மபுரியில் பருவமழை தீவிரம்

பதிவு செய்த நேரம்:2012-08-27 09:43:28

தர்மபுரி, : தமிழகத்தில் கடந்த ஜூன் 5ம் தேதி தென்மேற்கு பருவமழை துவங்கியது. ஆனால் அது தொடரவில்லை. இந்நிலையில் தர்மபுரி மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. கடந்த மூன்று தினங்களாக கேரளாவில் பருவமழை பெய்வதையொட்டி தர்மபுரி மாவட்டத்திலும் பலத்த மழை பெய்து வருகிறது. பாலக்கோடு, பென்னாகரம், ஒகேனக்கல் பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்தது.
கடந்த 25ம் தேதி தர்மபுரியில் 8 மிமீ, பாப்பிரெட்டிபட்டி 39 மிமீ, பாலக்கோடு 9 மிமீ, பென்னாகரம் 2 மிமீ, ஒகேனக்கல் 21.3 மிமீ, மாரண்டஹள்ளி 3 மிமீ, தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 2 மிமீ மழை பெய்துள்ளது.
நேற்று அதிகாலை முதல் வானம் மேக மூட்டமாக காணப்பட்டது. தர்மபுரி நகரில் பகல் முழுவதும் வெயிலின் தாக்கம் இன்றி சீதோஷ்ணநிலை குளுகுளுவென்று இருந்தது. இரவு நேரத்தில் குளிர்ந்த காற்று வீசியது. இதனால் இரு சக்கர வாகனங்களில் செல்வோர் ஸ்வெட்டர், ஜெர்கின் அணிந்தபடி சென்றனர்.

கோவை குற்றாலத்தில் அருவி நீர் வரத்து குறைகிறது

பதிவு செய்த நேரம்:2012-08-27 10:02:38

கோவை, : கோவை அருகே உள்ள கோவை குற்றாலத்தில் அருவிக்கு நீர் வரத்து குறைந்து வருகிறது.
சிறுவாணி அடிவாரத்தில் கோவை குற்றாலம் நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. பிரதான அருவி, பேபி

குளம், பிரதான குளம் என நீர்த்தேக்கங்கள் இருக்கிறது.
15க்கும் மேற்பட்ட மலைப்பகுதி நீரோடைகளில் வரும் தண்ணீர் பிரதான அருவியில் கொட்டுகிறது. மழை இல்லாததாலும் வெயிலாலும் நீரோடைகளில் நீர்வரத்து குறைந்து விட்டது. 100 அடி உயரத்தில் இருந்து கொட்டும் அருவியில் நீர் வரத்து குறைந்து கொண்டே வருகிறது. குறைந்த நீர் தேக்கத்தில் சுற்றுலா பயணிகள் கூட்டமாக நின்று குளிக்க முடியாத நிலையிருக்கிறது.
20க்கும் மேற்பட்ட நபர்கள் குளிக்கும் போது தண்ணீர் சகதியாக மாறி விடுகிறது.
இதனால் சுற்றுலா பயணிகள் தவிப்படைந்துள்ளனர்.
தற்போது நுழைவு கட்டணத்தை உயர்த்தி உள்ளனர். ஆனாலும் தகுந்த வசதிகளை செய்து தராததால் சுற்றுலா பயணிகள் அவதிக்கு ஆளாகி வருகிறார்கள்.

## சம்பா சாகுபடிக்கு நிலத்தை தயார்படுத்த விவசாயிகளுக்கு கடன் நுகர்வோர் மையம் வலியுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-08-27 10:11:40

திருத்துறைப்பூண்டி,: சம்பா சாகுபடிக்கு நிலத்தை தயார்படுத்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் கடன் வழங்க வேண்டும் என்று நுகர் வோர் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.
திருவாரூர் மாவட்ட நுகர்வோர் மையத் தலைவர் வக்கீல் நாகராஜன் முதல் வருக்கு அனுப்பி உள்ள மனுவில் கூறியிருப்பதாவது: திருவாரூர், நாகை மாவட்டங்களில் விவசாயத்தை நம்பி பல குடும்பங்கள் உள்ளன. இப்பகுதிகளில் மழை இல்லாததால் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது. இம்மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயிகளே முதுகெலும்பாவர். தமிழக அரசு தற்போது மேட்டூர் அணையில் இருந்து விவசாயத்திற்கு அடுத்த மாதம் தண்ணீர் திறக்க உத்தரவிட்டுள்ளது.
எனவே நிலங்களை உழுது, விவசாய முன்னேற்பாடுகளைச் செய்ய விவசாயிகளுக்கு வங்கிக்கடன் உதவி தேவையாக உள்ளது. தண்ணீர் வந்த பின்னரே, கடன் வழங்க முடியும் என்று வங்கியில் கூறுகின்றனர். இது தவறு.
விவசாய செலவு, உரம், இடுபொருள் விலை உயர்வால் ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் உயர்ந்துள்ளது. உடனடியாக விவசாயிகளுக்கு கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகள் ஏக்கருக்கு ரூ.15,000 கடனாக வழங்க அரசு உத்தரவிட வேண்டும். விவசாயிகள் சுமையை குறைக்க வட்டியில்லாக் கடனாக வழங்கவேண்டும். முன் கடன் பாக்கி உள்ளவர்களுக்கு பாகுபாடு இல்லாமல் கடன் வழங்கவேண்டும். இவ்வாறு நாக ராஜன் தெரிவித்துள்ளார்.

## வெள்ளாடு, நாட்டுக்கோழி வளர்க்க திருப்பூரில் 28, 30ல் பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-08-27 10:46:55

திருப்பூர், : வெள்ளாடு, நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்த இலவச பயிற்சிகள் திருப்பூரில் வரு கிற 28, 30 ஆகி ய தேதி க ளில் அளி க்கப்பட உள்ளது.

இதுதொடர்பாக கால்நடை மருத்துவ பல் கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் திருப்பூரில் வருகிற 28ம் தேதி வெள்ளாடு வளர்ப்பு குறித்தும், 30ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்தும் இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

திருப்பூர் பழைய பஸ்நிலையம் எதிரிலுள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடக்க உள்ள இப்பயிற்சியில் திருப்பூர் மற்றும் சுற்றுப்புற மாவட்ட விவசாயிகள் பங்கேற்கலாம்.

வெள்ளாடு வளர்ப்பு, நாட்டுக் கோழி வளர்ப்பில் உள்ள விஞ்ஞான முறைகள், வர்த்தக வாய்ப்புகள் குறித்து இப்பயிற்சியில் தெரிவிக்கப்படும்.

மேலும், விவரங்களுக்கு 0421-2248524 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## துவரை சாகுபடியை ஊக்குவிக்க மானியம்

பதிவு செய்த நேரம்:2012-08-27 09:54:27

கரூர், : துவரை சாகுபடியை ஊக்குவிக்க மானியம் வழங்கப்படுகிறது என்று கரூர் மாவட்ட கலெக்டர் ஷோபனா தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது,

கரூர் மாவட்டத்தில் சென்ற ஆண்டைவிட 1.5 மடங்கு அதிகமாக பயறு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 100 சதவீத மானியத்துடன் கூடிய 150 பாசன கருவிகள் ரூ.28.46 லட்சத்தில் பெறப்பட்டுள்ளது. நடப்பாண்டு பயறு வகை பெருக்கத்திற்காக நடவு முறையில் துவரை சாகுபடி 114 எக்டேரில் செயல் விளக்கத்திடல்கள் அமைக்க எக்டேருக்கு ரூ.15 ஆயிரம் மானியத்தில் ரூ.13.8 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. துவரை சாகுபடியை ஊக்குவிக்க 601 எக்டேருக்கு ரூ.7500 வீதம் ரூ.45.08 லட்சம் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது.துவரை சாகுபடியை அதிகரிக்க எக்டேருக்கு ரூ.5 ஆயிரம் வீதம் 200 எக்டேருக்கு 50 சதவீத மானியத்தில் ரூ.10 லட்சம் நிதி

தரப்பட்டுள்ளது. எண்ணெய் பனை சாகுபடியை ஊக்குவிக்க 100 எக்டேர் பரப்பிற்கு மானியமாக ரூ.43.62லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு சாகுபடி 200எக்டேரில் பயிரிட நுண்ணீர் பாசன திட்டம் மூலம் 75சதவீதம் மானியம் வழங்கப்படும். இதுதவிர ஒரு பருகரணை சீவல் முறையில் எக்டேருக்கு ரூ.12,500 மானியம், நீரில் கரையும் உரம் எக்டேருக்கு ரூ.12,500 என மொத்தம் ரூ.25ஆயிரம் வீதம் ரூ.50 லட்சம் வழங்கப்படும். விவசாயிகள் இதை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் ஷோபனா தெரிவித்துள்ளார்.

---

## விவசாயிகளுக்கு தொடர்ந்து கடன் வழங்கும் வகையில் வேளாண் வாராக்கடன்களிலிருந்து வங்கிகளுக்கு பாதுகாப்பு அளிக்க முடிவு



*தீரஜ் திவாரி,புதுடெல்லி*

*வேளாண் வாராக்கடன்களிலிருந்து வங்கிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் விதமாக 'வேளாண் வாராக்கடன் இடர்பாட்டு நிதி' என்ற ஒரு அமைப்பை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதனால், வேளாண் துறைக்கு வங்கிகள் தொடர்ந்து கடன் வழங்க முடியும்.*

*இடர்ப்பாடுகள்*

*வேளாண் துறைக்கு வழங்கப்படும் கடன்கள் வாராக்கடன்களாகும் சம்பவங்கள் அதிகரித்து*

வங்கிகளுக்கு பெரும் இடர்பாடுகளை ஏற்படுத்தி வருகிறது. கடந்த 2011–12 ஆம் நிதியாண்டில் வேளாண் துறைக்கான வாராக்கடன்கள் 47 சதவீதம் அதிகரித்திருந்த நிலையில், விவசாயம் தவிர்த்த பிற துறைகளில் இது 40 சதவீதம் அதிகரித்திருந்தது.

வறட்சி காரணமாக வேளாண் கடன் இடர்ப்பாடு உயர்ந்து வருகிறது. இதிலிருந்து நிவாரணம் கோரி வங்கிகள், இந்திய வங்கிகள் கூட்டமைப்பான ஐ.பீ.ஏ மற்றும் பாரத் ரிசர்வ் வங்கி ஆகியவை நீண்ட காலமாக மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளன. எனவே, தற்போது இதற்கு தீர்வு காணும் வகையில் வேளாண் வாராக்கடன் இடர்பாட்டு நிதி ஒன்றை அமைப்பது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருவதாக தெரிகிறது.

விவசாயிகள்

சிறு மற்றும் குறு விவசாய கடன்களுக்கு பொருந்தும் வகையில் கடன் உறுதி திட்டம் ஒன்றை ஏற்படுத்த, இதற்கென பாரத ரிசர்வ் வங்கி அமைத்த குழு ஒன்று பரிந்துரை செய்துள்ளது. இது ஒரு மாதிரி திட்டமாக செயல்படுத்தப்பட்டு, அதன் நடைமுறை சாத்தியங்களின் ஆய்விற்குப்பின்னர் பிற வகை வேளாண் கடன்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என ரிசர்வ் வங்கியின் குழு மேலும் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இதற்கான நிதியை மத்திய அரசு மட்டுமே வழங்குவது சாத்தியமில்லை என்பதால் வங்கிகள், நபார்டு வங்கி, மத்திய, மாநில அரசுகள் இதில் பங்கேற்க வேண்டும் என ஐ.பீ.ஏ அமைப்பை சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரிமியம்

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு முறை விவசாய கடன் வழங்கும் போதும் சம்பந்தப்பட்ட வங்கி கடன் தொகைக்கேற்ப ஒரு குறிப்பிட்ட தொகையை வேளாண் வாராக்கடன் இடர்பாட்டு நிதிக்கு பிரிமியமாக செலுத்த வேண்டும். அவ்வாறு பெறப்படும் பிரிமியம் தொகையும் நிதியுடன் சேர்க்கப்பட்டு, அதிலிருந்து இழப்பீடுகள் வழங்கப்படும் என தெரிகிறது. இருப்பினும், இழப்பீட்டின் அளவு முழுமையாக வழங்கப்படுமா அல்லது ஒரு குறிப்பிட்ட அளவிற்கே வழங்கப்படுமா என்பன போன்ற கேள்விகளுக்கு தீர்வுகள் காணப்படவில்லை.

## பருப்பு, சமையல் எண்ணெய் இறக்குமதி உயரும் என மதிப்பீடு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளதால், பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் இறக்குமதி உயரும் என மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு பருவமழை

சென்ற சில தினங்களாக நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது.

*இருப்பினும், இது இயல்பான அளவைக் காட்டிலும் 14 சதவீதம் குறைவாகும். இதனையடுத்து, நடப்பு கரீப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்) அனைத்து வகையான தானியங்கள் சாகுபடி பரப்பளவு மிகவும் குறைந்துள்ளது. இதனால், உணவு பொருள்கள் விலை உயரும் என்ற அச்சப்பாடு நிலவி வருகிறது.*

*நடப்பு கரீஃப் பருவத்தில் இதுவரை பருப்பு சாகுபடி பரப்பளவு சென்ற கரீஃப் பருவத்தின் இதே காலத்தைக் காட்டிலும் 11 சதவீதம் சரிவடைந்து 99.70 லட்சம் ஹெக்டேரிலிருந்து 88.30 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. இதே காலத்தில், எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு 1.70 கோடி ஹெக்டேரிலிருந்து 1.64 கோடி ஹெக்டேராக குறைந்துள்ளது.*

*உற்பத்தி*

*கடந்த ஆண்டில் பருப்பு உற்பத்தி 1.72 கோடி டன்னாகவும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 3 கோடி டன்னாகவும் இருந்தது. இவ்வாண்டில் சாகுபடி பரப்பளவு குறைந்ததையடுத்து, உற்பத்தி சரிவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம், தேவைப்பாடு மிகவும் அதிகமாக உள்ளது. எனவே, நடப்பு ஆண்டில் இறக்குமதி மிகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*கடந்த மூன்று ஆண்டுகளில் ஆண்டிற்கு சராசரியாக 25–35 லட்சம் டன் பருப்பு வகைகளும் மற்றும் 80–90 லட்சம் டன் சமையல் எண்ணெயும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.*

*அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் வெளிமதிப்பு சரிவடைந்து, இறக்குமதி செலவினம் உயர்ந்து வருகிறது. இந்நிலையில், சமையல் எண்ணெய், பருப்பு இறக்குமதி அதிகரிப்பதால் வர்த்தக பற்றாக்குறை அதிகரிக்கும்.*

ஊட்டி நகராட்சியில்

# ரூ.2¼ கோடி செலவில் உரம் தயாரிக்கும் தொழிற்சாலை

ஊட்டி, ஆக. 28–

ஊட்டி நகராட்சியில் ரூ.2 கோடியே 24 லட்சம் செலவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை பிரித்து எடுத்து உரம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

## திடக்கழிவு மேலாண்மை திட்டம்

நீலகிரி மாவட்டத்தின் இயற்கை அழகை பாதுகாக்கவும், சுற்றுச்சூழல் மாசுபடாமல் இருக்கவும் கடந்த பல ஆண்டுகளாக உள்ளாட்சி அமைப்புக்களில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நகர் மற்றும் கிராமப்புறங்களில் உள்ளாட்சி அமைப்புக்கள்சார்பில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை ஆகிய வைகளை தரம் பிரித்து எடுக்கும் வகையில் இரு தொட்டிகள் மற்றும் கன்டெய்னர்கள் ஆகியவை வைக்கப்பட்டு குப்பைகளை தனித்தனியாக போடவும் மக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

## பிளாஸ்டிக் கழிவுகள்

ஆனால், பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வு இன்றி மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் ஆகிய வற்றை ஒரே தொட்டியில் கொட்டி வருகின்றனர். இதனால், மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை ஆகியவைகளை பிரிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மேலும், அனைத்து குப்பைகளையும் ஒரே இடத்தில் கொட்டி விடுவதால், மக்கும் குப்பைகளோடு பிளாஸ்டிக் கழிவுகளும் சேர்ந்தது. இதனை பிரித்த எடுக்க ஊட்டி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதே நிலை தொடருமாயின் ஊட்டி அருகே உள்ள தீட்டுக்கல் குப்பை தொட்டி ஓரிரு ஆண்டுகளில் குப்பை மலையாகவே காட்சியளிக்கும். அதுமட்டுமின்றி, இந்த குப்பை தொட்டியில் இருந்து வெளியேறும் பிளாஸ்டிக், ரசாயன கழிவுகள் அதனை சுற்றியுள்ள விவசாய நிலங்களையும் பாதித்து விடும்.

## மண் புழு உரம் தயாரிக்கும் தொழிற்சாலை

இந்த நிலையில், மகளிர் குழுக்களை கொண்டு மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து அதன் மூலம் மண்புழு உரம் தயாரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ள திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அறிக்கையும் தாக்கல் செய்யப் பட்டது. எனினும், இதனை நகராட்சியால் நிறைவேற்ற முடியவில்லை.

ஊட்டி நகராட்சியில் திடக் கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த கடந்த ஆண்டு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அப்பணிகள் மேற்கொள்ள முதற் கட்டமாக ரூ.15 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டது. இதில், ஒரு பகுதியாக ரூ.2 கோடியே 24 லட்சத்தில் ஊட்டி அருகேயுள்ள தீட்டுக்கல்லில் குப்பை கூளத்தில் மண் புழு உரம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது.

## கட்டுமான பணிகள்

இதுகுறித்து நகராட்சி பொறியாளர் ராமமூர்த்தி கூறியதாவது:– ஊட்டி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மேற்கொள்ள கடந்தபல ஆண்டுகளாககோரிக்கை வைக்கப்பட்டது. குப்பைகளை பிரித்து அதிலிருந்து உரம் தயாரிப்பது குறித்ததிட்ட அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட தமிழக அரசு தற்போது இந்ததிட்டத்தை செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. முதற்கட்டமாக ரூ.2.24 கோடி நிதியில் தீட்டுக்கல் குப்பை குளத்தில் குப்பைகளை பிரித்து எடுத்து உரம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது.

தற்போது இதற்கான கட்டுமான பணிகள் நடந்து வருகிறது. கட்டுமான பணிகள் நிறைவடைந்தவுடன் இங்கு குப்பைகளை பிரித்து எடுத்து உரம் தயாரிக்கப்படும். இதன் மூலம் குப்பைகள் குறைந்து ஊட்டி நகராட்சி தூய்மையான நகரமாக திகழும். அதுமட்டுமின்றி நகராட்சி கூடுதல் வருவாய் கிடைக்கவும் வாய்ப்புள்ளது என்றார்.



ஊட்டி தீட்டுக்கல் பகுதியில் ரூ.2¼ கோடி செலவில் உரம் தயாரிக்கும் தொழிற்சாலை கட்டுவதற்கான பணிகள் நடைபெற்ற போது எடுத்த படம்.